[12th February 1959]

Madras-6, explaining the circumstances under which financial assistance is sought, producing a medical certificate of illness obtained from a Government Medical Officer or Honorary Medical Officer not below the rank of an Assistant Surgeon and a poverty certificate obtained from any local Revenue Officer not below the rank of Tahsildar.

Overseas scholarships

* 261 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of scholars sent from this State under the scheme of Overseas Scholarships to Scheduled Castes, Scheduled Tribes and other Backward Classes in the year 1954-58, year-war; and

(*b*) among them how many are (i) State Government employees, (ii) non-Government employees, and (iii) students?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Selection for Overseas Scholarships is made by the Union Public Service Commission on All-India basis. They do not communicate to the State Government the names of candidates selected by them each year from each State.

(*b*) Does not arise.

Sri K. SATTANATHA KARAYALAR : நமது மாகாணத்தவர்கள் எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவதற்கு மத்திய சர்க்காருக்கு எழுதப்பட்டதா ? அப்படியானால், அதற்குப் பதில் எப்பொழுது கிடைக்கும் ?

The Hon. Sri P. KAKKAN : மத்திய சர்க்காரிடம் எழுதிக் கேட்டோம். நமது மாகாணத்திலிருந்து அவர்கள் 12 பேர்களை "ஸெலக்ட்" பண்ணியிருக்கிறார்கள். அவர்களில் நால்வர் ஹரிஜனங்கள், நால்வர் ஆதி வாசிகள், நால்வர் பிற்பட்ட வகுப்பினர்.

Sri. T. S. RAMASWAMY PILLAI : நம்முடைய அரசாங்கத்தில் உள்ள உத்தியோகஸ்தர்களில் எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறது? அந்த விவரத்தை சொல்வார்களா ?

The Hon. Sri P. KAKKAN : இப்பொழுது சொல்வதற்கில்லை. தனியாக கேள்வி போட்டால் சொல்லலாம்.

Sri K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில், "மத்திய சர்க்கார் நமது மாநிலத்திலிருந்து எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது பற்றி புள்ளி விவரம் தர முடியாது" என்று சொன்னதாகத் தெரிவித்தார்கள். அப்படி அறிவிப்பது நம்முடைய மாநில சர்க்காருக்குள்ள நியாயமான உரிமையை மத்திய சர்க்கார் அலட்சியப்படுத்தியது ஆகாதா ? எவ்வளவு என்று அறிவிக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கவில்லையா ?

12th February 1959]

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன பதிலைச் சரியாக கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். மறுபடியும் தெரிவிக்கிறேன்—

"(*a*) Selection for Overseas Scholarships is made by the Union Public Service Commission on All-India basis. They do not communicate to the State Government the names of candidates selected by them each year from each State.

(*b*) Does not arise."

Sri K. ANBAZHAGAN : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், நான் அறிய விரும்புவது—நம்முடைய சென்னை சட்டசபையில் உள்ளவர்கள் மத்திய சர்க்கார் எந்தத் துறையிலே யாரைத் தேர்ந்தெடுத்தார்கள், அவர்கள் நம்முடைய மாநில சர்க்காரைச் சேர்ந்தவர்களா, அல்லது நம்முடைய மாநிலத்திற்கு உட்பட்டவர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினால், அதை மத்திய சர்க்கார் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்க வில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறாரா தெரிவிக்கக் கடமைப் பட்டிருந்தும் மறுக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறாரா?

Mr. SPEAKER : இது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகும் ? ஒரு கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்விக்கு என்ன பதில் கொடுப்பது என்பது அமைச்சருடைய பொறுப்பு. அவர் எப்படிப் பதில் சொல்ல வேண்டும் என்று சபையிலே நான் தீர்மானிக்க முடியாது.

Sri K. B. S. MANI : வெளிநாட்டுக்குப் போய்ப் படிப்பதற்கான ஸ்காலர்ஷிப் பெறுவதற்கு சென்னை மாநிலத்திலிருந்து பல ஹரிஜனங்கள் மனுப் போட்டும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ? வருகிற ஆண்டிலாவது சென்னை மாநிலத்திலிருந்து மனு செய்துகொள்கிற ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கு மாநில சர்க்கார் உதவி செய்ய முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN : இதற்குப் பதில் சொல்ல இப்பொழுது முடியாத நிலைமையில் இருக்கிறேன். கனம் அங்கத்தினர் விவரமாக தனி கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

Irrigation tank

* 262 *Q.*—**Sri S. LAZAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to construct a tank (irrigation) at Peruvalappur village, Lalgudi taluk, Tiruchirappalli district;

(*b*) the cost of the scheme;

(*c*) the acreage that will be benefited thereby; and

(*d*) when it will be (i) taken up for execution and (ii) completed?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 10 lakhs.

(*c*) 2,000 acres.

(*d*) (i) The scheme is under detailed investigation by the Public Works Department.

(ii) Does not arise.